

# புறக்கோயிலும் அகக்கோயிலும்!

ரா. கணபதி

பசு
பதிவுகள்

காயமே கோயிலாகக்
கடிமனம் அடிமையாக
வாய்மையே தூய்மையாக
மனமணி இலிங்கமாக
நேயமே நெய்யும் பாலா
நிறைய நீரமைய ஆட்டிப்
பூசனை ஈசனார்க்குப்
போற்றவிக் காட்டினோமே.

என்று ஓரிடத்தில் அப்பர் பெருமான் பாடுகிறார். இன்னோர் இடத்தில் ''தொண்டர் அகமலாற் கோயிலில்லை ஐயன் ஐயாறனார்க்கே'' என்கிறார்.

இவற்றை வைத்துக் கொண்டு இக்காலத்தில் சிலர் வெளிக்கோயில், புறவழிபாடு இவை யாவுமே அநாவசியம் என்ற ரீதியில் பேசுகிறார்கள். ''கோவிலாவது ஏதடா? குளங்களாவது ஏதடா? கோவிலும் மனத்துளே! குளங்களும் மனத்துளே!'' என்கிறார்கள்.

உண்மைதான். நம் உயிர்க்குயிராக, உள்ளுக்குள்ளே இறைவனை உணர்ந்துவிட்டோமாயின் வெளிக்கோயில் வேண்டாம்தான். புறப்பூசை வேண்டாம்தான். ஆனால் நெஞ்சுக்கு வஞ்சமின்றி நம்மை நாமே ஆய்ந்து பார்த்துக் கொண்டால், இவ்விதம் நம்முளே தெய்வீகத்தை, தெய்வீகத்துள்ளே நம்மைக் கண்டு கொள்கிறோமா? சில காலம், சிறிது நேரம் வேண்டுமாயின் இவ்வுன்னத உணர்வில் நம்மில் சிலர் இருக்கக் கூடும். மற்ற நேரத்தில் ஐம்புலன் அணைப்பில் அகப்பட்டுத் தவிக்கும் அற்ப சீவனாகத்தான் இருப்போம்.

இந்தத் தவிப்பைத் தணித்து இன்பம் ஊட்டவே, இறை நினைவூட்டவே ஆலயங்கள் வெளியில் வேண்டியிருக்கின்றன. அலைப்பை நீக்கி அமைதி நல்க ஆலயம் அவசியமாக இருக்கிறது. எங்கும் கடவுளை உணரும் உயர்நிலை எய்தும்வரை, எங்கோ ஓரிடத்திலாவது கடவுளை உணர்த்துவதற்காகக் கோயில் வேண்டியிருக்கிறது. எப்போதும் அவனை உணர்ந்து, அவ்வுணர்வே பூசையாக இருக்கும் உச்ச நிலையை அடையும் வரை, சில போதாவது அவனது பக்தியில் ஈடுபட்டு நிற்க அர்ச்சனையும், அபிஷேகமும் உற்சவமும், உலாச்சுற்றும் வேண்டும் தான்.

நம் சாமானிய நிலையில் கோயிலும், புறப்பூசையும் வேண்டாம் என்பது அகங்காரத்தால் நம் தலையில் நாமே மண்ணை வாரிப் போட்டுக் கொள்ளும் உற்பாத காரியம்தான். நம் முன்னோர் பதினாயிரங் காலம் பயிராக நமக்குத் தந்துள்ள செல்வத்தை நாமாக நஷ்டப்படுத்திக் கொண்டு தரித்திரராக நிற்கும் பேதைமைதான்.

மெய்யாலுமே மெய்யுணர்வு பெற்று ஆழ்வாராதிகளும், நாயன்மார்களும் ஆலய தரிசனத்தை நிறுத்தவில்லைதான். மேலே மேற்கோள் காட்டிய வாகீசப் பெருந்தகை உட்பட எங்கும் உள்ள இறைவனை எங்குமே அவர்கள் காண முடிந்த போது ஆலயத்தில் மட்டும் காணமுடியாதா என்ன? எனவேதான் பிறர்க்கும் ஒரு வழிகாட்டியாக, அந்த மகான்களும் தல யாத்திரை, தீர்த்த யாத்திரை செய்தனர். அவர்களுக்குப் பலப்பலபடிகள் கீழே உள்ள நாமோ, 'கோயிலெதற்கு? குளமெதற்கு?' என்கின்றோம். அவை மெய்யாகவே நமக்குத் தேவையில்லை என்று பக்குவத் தெளிவு வந்து விட்டாலும் கூட, இதை வெளியில் சொல்லிச் சத்தம் போட வேண்டியதில்லை. ஆலயம் தொழும் சாலவே நல்ல பழக்கமுடைய பிறரது புத்தி பேதலிக்கும்படிப் பிரசாரம் செய்ய வேண்டியதில்லை. ஆன்மாநுபூதியே வந்துவிட்டாலும் கூட, அப்போதும் புறக்கோயில் அகக்கோயிலின் அற்புத அடையாளமாக இலகுமே தவிர, அகவின்பத்துக்கு ஊறு பயப்பதாக ஒரு போதும் இராது. அது அவசியமில்லாததாக வேண்டுமாயின் ஆகலாம்; ஆனால் அகக்கோயிலுக்கு ஆபத்து விளைவிப்பதாக எந்நாளும் ஆகாது!

'சாந்நித்தியம்' என்று ஒன்று மெய்யாலுமே உண்டு. மக்களுக்கு உயர்ந்த ஆன்ம நலன் பயக்கும் சக்தி அதற்கு உண்டு. இறைவன் அருளாலும், ரிஷிகள் தவத்தாலும், மந்திரங்களின் மகிமையாலும், ஆகம விதிகளின் அநுசரணையாலும் இந்தச் சாந்நித்தியம் உண்

டாக்கப்படுகிறது. தொடர்ந்து காக்கப்படுகிறது. அதன் பயனை மக்கள் யாவரும் பெறுவதற்கு மேலும் மேலும் ஊக்கம் தரவேண்டுமேயன்றி, வெற்று வேதாந்தம் பேசி இரண்டுங் கெட்ட நிலையை உண்டாக்கலாகாது.

சாந்நித்திய விஷயத்தில் வெற்றியைக் கொண்டு ஆராய்ந்து, மாறுதல்கள் செய்வது விஷப் பரீட்சையே ஆகும். நீண்ட நெடும் மரபுக்கு அடங்கியே நிற்பதால் ஒரு குறைவும் வந்துவிடாது. புது ஏற்பாடுகளைச் செய்வதால், குறை ஏற்படுமாயின் அதன் பின் அதற்கு நிவர்த்தி ஏது? பரிகாரம் ஏது?

ஆலயங்கள் இன்னொரு விதத்திலும் அவசியமாகின்றன. நம் அற்புதச் சிற்ப, சித்திரக் கலைகளின் உறைவிடம் அவைதாமே?

எனவே ஆலயங்களைச் செழிக்கவிடுவோம்; அவற்றில் ஆகமங்களையே அவற்றுக்குரிய விதிகளில் தழைக்க விடுவோம்.

முதலில் மேற்கோள் காட்டிய அப்பர் பெருமானின் மணிவாசகங்கள் சிலவற்றிற்கே முடிவிலும் திரும்புவோம் :

திருக்கோயில் இல்லாத திரு இல் ஊரும்....
பாங்கினொடு பல தளிகள் இல்லா ஊரும்....
அவையெல்லாம் ஊரல்ல, அடவி காடே (1)

ஆக்கையாற் பயன் என்? அரன்
கோயில் வலம் வந்து
பூக்கையால் அட்டி, ''போற்றி'' என்னாத
இவ் ஆக்கையாற் பயன் என்? (2)

கால்களாற் பயன் என்? கறைக்
கண்டன் உறைகோயில்
கோலக் கோபுரம் கோகரணம்
சூழாக் கால்களாற் பயன் என்? (3)

நிலைபெறுமா(று) எண்ணுதியேல் நெஞ்சே நீ வா
நித்தலும் எம்பிரானுடையகோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்குமிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடி,
''சங்கரா சய போற்றி போற்றி'' யென்றும்
''அலை புனல் சேர் செஞ்சடை எம் ஆதி!'' யென்றும்
''ஆரூரா'' என்றென்றே அலறா நில்லே. (4)